1984 பிப்ரவரி 23]

குறிப்பிட்டார்கள. அவர்களுக்கு நோய் பரவுகிறது என்ற அடிப்படையில் குழந்தைகளைத் தனியாகப் பிரித்து தனியாக விடுதி அதற்காக ஆரம்பித்து பள்ளி விடுதியில் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. விண்ணம்பள்ளி பற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார்கள். அப்படி ஏதாவது குழந்தைகள் அவர்களோடு இருந்தால் தனியாகப் பிரித்து அந்த விடுதியில் சேர்ப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொழு நோய் பரவாதது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: பெற்றோர்களிடமிருந்து அந்தக் குழந்தைகளுக்கு நோய் பரவுவதாகக் கூறுகிறார்கள். ஆகவே தனியாக வைப்பதற்கு ஏற்ற முறையில் தனியாக ஹோம் ஏற்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: நான் விடையிலேயே குறிப்பிட்டு இருக்கிறேன். குழந்தைகள் பள்ளி விடுதிகளில் சேர்க்கப்பட்டு நோயிலிருந்து பாதுகாக்கப்படுகின்றனர். நோயற்ற குழந்தைகளுக்கும் நோய் அணுகாமல் இருக்க தடுப்பு மருந்து அளிக்கப்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் தினசரி உணவுச் செலவுக்கான தொகை

153 —*வினா எண். 18524 :— திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களில் உறைவோர் தினசரி உணவுக்காக வழங்கப்படும் தொகை அதிகரிக்கப்பட்டு மீண்டும் குறைச்கப்பட்டு விட்டது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் காரணம் என்ன ?

(இ) மீண்டும் உதவித் தொகையை உயர்த்த அரசு ஆவண செய்யுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

(இ) பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களில் உள்ள வயது வந்தோர்க்கு ரூ. 2.30-ம், சிறுவர்களுக்கு ரூ. 1.15-ம் தினசரி உணவுச் செலவுத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இத் தொகை, 1—9—1974 முதல் அமுலில் உள்ளது. இதனை வயது வந்தோர்க்கு ரூ. 4 ஆகவும், சிறுவர்களுக்கு ரூ. 3 ஆகவும் உயர்த்து வதற்கான செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவமனைகளில் உள் நோயாளி களாக இருக்கிற அந்த நோயாளிகளுக்கும் அதே போல் சிறை யில் கைதிகளாக இருப்பவர்களுக்கும் கொடுப்பதை விட இங்கே நோயுற்றவர்களாக இருப்பவர்களுக்குக் கொடுக்கிற தொகை மிகவும் குறைவு என்பது அரசின் கவனத்திற்கு வந்து இருக்கிறதா? அவர்களுக்குத் தேவையான மாற்றுப் பொருட்கள் கொடுக்காத சூழ்நிலை இருக்கிறது. அதையும் அரசு நிவர்த்தி செய்ய முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழு நோயால் பாதிக்கப் பட்ட அந்த பெரியவர்களுக்கும், சிறுவர்களுக்கும், அந்த இல்லங் களில் அதாவது அவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற தொகைக்கு ஏற்றவாறு உணவு நல்ல முறையில் அவர்களுக்கு கொடுக்கப்படு கிறது. காலையில் அவர்களுக்கு சிற்றுண்டி, தேநீர், கொடுக்கப் படுகிறது. மத்திய உணவு கொடுக்கப்படுகிறது. மாலையில் தேநீர் கொடுக்கப்படுகின்றது. இரவில் உணவு கொடுக்கப்படு கின்றது. வாரத்திற்கு ஒரு முறை இறைச்சியும் கொடுக்கப்படு கின்றது. காச நோயாளிகளுக்கு சிறப்பு உணவு வழங்கப்படு கிறது. சுதந்திர தினத்திற்கும், காந்தி அடிகள் பிறந்த நாள் அன்றும் மற்றும் முக்கியமான குறிப்பிட்ட நாட்களில் அவர்களுக்கு ஒரு ரூபாய்க்கு சிறப்பு உணவு வழங்கப்படுகிறது. இப்படி அவர் களுக்கு ஒதுக்கப்பட்ட தொகைக்கு ஏற்றவாறு உணவு கொடுக் கப்படுகிறது. அந்த உணவுத் தொகையை கூட 4 ரூபாய் பெரி யவர்களுக்கும், 3 ரூபாய் சிறுவர்களுக்கும் உயர்த்தலாம் என்ற செயற் குறிப்பு அரசின் ஆய்வில் இருக்கிறது.

திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்கின்ற தொகைக்கு ஏற்றவாறு உணவு வழங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நான் நேரடியாக ஒரு உணவு விடுதியில் சாப்பிட்டேன். அந்த உணவு மிக மோசமான நிலையில் இருந்தது என்பதை சொல்ல விரும்புகிறேன். அப்படிப்பட்ட நோய் உள்ளவர்களுக்கு காச நோய் உள்ளவர்களுக்கு சிறப்பு உணவாக முட்டை, கறி, பால், ரொட்டி, தேவையான மருந்துகள் கொடுக்க வேண்டும். அவற்றை அரசு கொடுப்பதற்கு முயற்சி செய்யுமா? அதேபோல் சிறைக் கைதிகளுக்கும் மருத்துவ மனையில் உள்ள உள் நோயாளிகளுக்கும் விடுமுறை மறுக்கப்படுகிறது. இதை யெல்லாம் அரசு கவனிக்குமா என அறிய விரும்புகிறேன்.

1981 பிப்ரவரி 23]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி தொழுநோய் பற்றியது. சிறைக் கைதிகளைப் பற்றியது அல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இல்லங்களைப் பார்த்தேன் என்று சொல்கிறார்கள். அந்த உணவு சரியான முறையில் இல்லை என்று அவர்கள் கூறினார்கள். நான் செங்கற்பட்டில் உள்ள பரனூர் இல்லத்திற்கு திடீர் என்று சென்று பார்த்தேன். அந்த உணவு களைப் பார்க்கின்றபோது அவைகள் நல்ல முறையில் அமைக் கப்பட்டு இருந்தது. இப்படிப்பட்ட நல்ல உணவுகளை அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சூழ்நிலையை இந்த அரசு இன்றைக்குச் செய்து இருக்கிறது. நல்ல முறையில் உணவு செய்யப் பட்டு இருக்கிறது என்று அவர்களிடம் சொல்லி விட்டு வந்தேன். நான் கூட அந்த உணவை அருந்தி விட்டுத்தான் அந்த இல்லத்தைவிட்டு வந்தேன். அந்த அடிப்படையில் நல்ல உணவு களைத்தான் அவர்களுக்கு கொடுத்துக்கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிச்சைக்காரர்களை எங்கு எங்கே இருக்கிறார்களோ அவர்களை மறுவாழ்வு இல்லத்திற்கு கொண்டு வந்து அடைப்பதைவிட அந்த பிச்சைக்காரர்கள் எங்கு எங்கே இருக்கிறார்களோ அவர்களை அழைத்து அவர்களுக்கு ஒரு தொழில் தொடங்க கூட்டுறவு சங்கம் அமைத் துக் கொடுக்க மத்திய அரசிடம் இந்த அரசு ஏதேனும் சிபாரிசு செய்து இருக்கிறதா? அப்படிச் செய்யவில்லை என்றால் அப்படி சிபாரிசு செய்வதற்கு அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்? வாரத்திற்கு ஒருநாள் மனு நீதி நாள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டி மக்கள் குறைகளை கேட்கிறார்கள். அதுபோல இந்தப் பிச்சைக்காரர் களுக்கு என்று ஒரு நாள் ஒதுக்கி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவர்களுடைய குறைகளைக் கேட்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்? அதேபோல் தமிழ்நாட்டில் எவ்வளவு பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிச்சைக்காரர்களுக்கு என்று தமிழ்நாட்டில் தனியாக 10 இல்லங்கள் மாவட்ட வாரியாக ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன. அந்த அடிப்படையில் பிச்சைக் காரர்களை அந்த இல்லங்களில் சேர்த்து அவர்களுக்கு மறு வாழ்வு கொடுப்பதோடு மட்டும் அல்லாமல் பிற்காலத்தில் சுயமாக, சுதந்திரமாக வாழ்வதற்கு வேண்டிய வழிவகை களைச் செய்வதற்கு என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக் கிறார்கள் என்றால் அவர்களுக்கு தொழில் கற்றுக் கொடுத்து அதன் மூலமாக அவர்கள் சுயமாகவும், சுதந்திரமாகவும்.

வாழ்வதற்கான வழி வகைகளை அரசு மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் எவ்வளவு பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள் என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். ஆண்கள் மொத்தம் 1,985, பெண்கள் 987, சிறுவர்கள் 316 மொத்தம் 3,288. தொழு நோயால் பாதிக்கப்பட்ட பிச்சைக்காரர்கள் இந்த இல்லங்களில் மறு வாழ்வு பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10.20)

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பிச்சைக்காரர்களின் நலத்திற்காக என்று தனியாக ஒரு வாரியம் அமைத்து, அதற்குத் தாமரைக்கனி போன்ற உறுப்பினர்களைத் தலைவராக நியமிப்பதற்கான யோசனை அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தலைவர் பதவி ஒன்றும் இப்பொழுது காலியாக இல்லை (சிரிப்பு).

154—

பெரியார் மாவட்டத்திலுள்ள நடமாடும் கால்நடை மருந்தகங்கள்.

*வினா எண். 18603— திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பெரியார் மாவட்டத்தில் நடமாடும் கால்நடை மருத்துவ மனைகள் உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு இயங்குகின்றன ?

(இ) அவைகளில் என்னென்ன வசதிகள் உள்ளன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) ஆம்.

(ஆ) ஈரோடு கோபிசெட்டிபாளையம், தாராபுரம் கோட்டங்களில் சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர்கள் கட்டுப்பாட்டில் மூன்று நடமாடும் கால்நடை மருந்தகங்கள் இயங்குகின்றன.

(இ) இந்த நடமாடும் கால்நடை மருந்தக ஊர்திகள் ஒரு வாரத்தில் 5 நாட்கள் காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை குறிப்பிட்ட கிராமங்களுக்குச் சென்று கால்நடை